MCOP: 16/2020

Date:30.03.2023

பெயர்  : முத்துசாமி

**மனுதாரர் தரப்பு சாட்சி 1 ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**குறுக்கு விசாரணை - 2ம் எதிர்மனுதாரர் தரப்பில்**

சம்பவம் நடந்த தேதி 04.11.2012 மதியம் சுமார் 3 மணி இருக்கும். சம்பவம் எனது வீட்டருகே தோட்டம் அருகே நடந்தது. 1ம் மனுதாரர் கந்தசாமி எனது தந்தை என்றால் சரிதான். பதிவு எண்.TN 30 AX 3881 டிராக்டர் எனது தந்தை பெயரில்தான் உள்ளது. 2ம் எதிர்மனுதாரரிடம் மேற்படி டிராக்டரானது சம்பவத்தின்போது காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பதை காட்ட பாலிசி நகல் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த சம்பவம் நடந்து 114 நாட்களுக்கு பின்புதான் ஜலகண்டாபுரம் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது என்றால் சரிதான். விபத்து நடந்த பின்பு ஈரோடு நேஷனல் மருத்துவமனையில் எப்போது சேர்ந்தேன் என்றால் 04.11.2012ல் சேர்ந்தேன்.

விபத்து பதிவேட்டு நகல் ம.த.சா.ஆ.2ல் 17.11.2012 காலை 10.30 மணிக்கு சேர்ந்ததாக காட்டப்பட்டுள்ளது. ம.த.சா.ஆ.2ல் விபத்து பதிவேட்டு நகலில் சம்பவ விபத்தானது 04.11.2012 தேதியில் நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஈரோடு நேஷனல் மருத்துவமனையில் இருந்து என்னை 21.11.2012 உள்நோயாளியாக சிகிச்சை பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த புகாரானது 26.02.2013 தேதியில்தான் கொடுக்கப்பட்டது. 04.11.2012 தேதியில் எந்த புகாரும் கொடுக்கவில்லை. மருத்துவமனையில் 17.11.2012 தேதியில் சேர்ந்தேன். அப்போதாவது புகார் கொடுத்தேனா என்றால் இல்லை, மருத்துவமனையில் இருந்த விடுவிக்கப்பட்ட 21.11.2012 தேதிக்கு பின்பு புகார் அளித்தேனா என்றால் இல்லை.

புகார் அளித்த பின்பு போலிசார் என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இதுமாதிரி சம்பவமே நடக்கவில்லை என்றும், வேறு எங்கோ அடிபட்டதற்காக பொய்யாக எனது தந்தையின் வண்டியிலேயே அடிபட்டதாக கூறி இம்மனு என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் 04.11.2012க்குபின்னிட்டு நான் சுமார் 114 நாட்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் அதற்கு பின்பே எனது தந்தை வண்டியில் எனது தந்தையின் டிராக்டரால் விபத்து ஏற்பட்டதாக ஒரு பொய்யான வழக்கை இழப்பீடு பெற வேண்டும் என்ற நோக்கத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது காலதாமதத்திற்கான காரணங்கள் அனைத்துமே பொய்யானது என்றால் சரியல்ல. புகாரில் சொல்லப்பட்டுள்ள டிராக்டர் ஓட்டுநர் பவானியை சேர்ந்தவர் என்றும், அப்போது அவர் சம்பவ

இடத்திலேயே இல்லை என்றால் சரியல்ல. ம.த.சா.ஆ.2 விபத்து பதிவேட்டு நகலில் எந்த வாகனத்தில் விபத்து ஏற்பட்டது என்பதை காட்ட வாகன எண் குறிப்பிட்டு எழுதப்படவில்லை என்றால் சரிதான்.

இந்த மனுவில் உள்ள டிராக்டரினால்தான் எனக்கு விபத்து ஏற்பட்டதாக சொல்லியுள்ளேன், அந்த டிராக்டரை மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்விற்கு உட்படுத்தப்பட்டதா என்றால் இல்லை. மேற்படி டிராக்டரின் பதிவு சான்று, தகுதி சான்று, Permit தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 1ம் எதிர்மனுதாரர் வாகனம் விபத்தில் சம்மந்தப்படவில்லை, 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தை அதன் ஓட்டுநரும் ஓட்டவில்லை, இந்த சம்பவமும் நடைபெறவில்லை, நஷ்டஈடு பெற வேண்டும் என்பதற்காக இம்மனு போட்டுள்ளேன் என்பதால் 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து இம்மனு தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல. விபத்தின்போது எடுக்கப்பட்ட நுண்கதிர்படங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. மருந்து பில்கள் அனைத்தும் இவ்வழக்கிற்காக தயாரிக்கப்பட்டவை என்றால் சரியல்ல. நஷ்டஈடு அதிகம் வாங்க வேண்டும் என்பதற்காகத்தான் மேற்படி தொகைகள் மிகைப்படுத்தி மனுவில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. விபத்தில் ஏற்பட்ட காயங்களால் எனக்கு எவ்வித ஊனங்களும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

ஈரோடு நேஷனல் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்ட பின்பு கடந்த 11 ஆண்டுகளுக்கான சிகிச்சை எடுத்ததற்கான மருத்துவ குறிப்புகள் தாக்கல் செய்யவில்லை. மேற்படி நான் அளித்த புகாரினை ஜலகண்டாபுரம் போலிசார் விசாரணை செய்து மேற்படி புகாரானது பொய்யானது என முடிவு செய்து எனக்கு RCS நோட்டிஸ் கொடுத்து புகாரானது முடித்து வைக்கப்பட்டது என்றால் சரியல்ல. எனது வயது, வருமானம், தொழிலை காட்ட ஆதரவுகள் தாக்கல் செய்யவில்லை. எனக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது, நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. சம்பவத்தின் மாதிரி வரைபடம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் தாக்கல் செய்துள்ள மனு பொய்யானது என்றும், அதிக நஷ்டஈடு கேட்டுள்ளதால் மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>

இல்லை.

ஒப்பம்/- PW1
ஒப்பம்/- சார்பு நீதிபதி, ஓமலூர்